## கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் - 2017

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 148,939,054 கிரயமான நிலையான சொத்துக்கள் பூரணமாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ரூபா 1,494,871 தொகையான நிலையான வைப்பிற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அந்த வைப்புக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த வட்டி முறையே ரூபா 99,708 மற்றும் ரூபா 161,371 தொகைகள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் சேவையிலிருந்து விலகிய 06 உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 4,102,736 ஆக இருந்த போதிலும், 04 உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 3,825,064 தொகை மாத்திரம் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கில் வரவு வைத்து மிகுதி ரூபா 277672 தொகை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக பணிக்கொடை ஒதுக்கீடுகள் மற்றும் செலவினம் என்பன ரூபா 277,672 தொகை அதிகரித்துக் காணப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) பல்கலைக்கழகத்தின் கட்புல கலைப்பீட வளாகத்தில் தாபிக்கப்பட்ட இரண்டு தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக 2017 மார்ச் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்காக செலவாகிய மின்சார அலகுகளுக்காக கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 782,574 தொகை கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பல்கலைக்கழகத்தின் மின்சாரச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்தின் சேவையிலிருந்து விலகிச் சென்ற, சேவையைக் கைவிட்டுச் சென்ற மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,141,570 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி பெறப்பட்டு குறித்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2011, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 09 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,685,044 தொகையான 11 கட்டுநிதிகள் 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 38,211,346 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,536,658 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 42,748,004 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 55,469,442 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் ரூபா 58,235,425 தொகை அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 37,933,466 இனால் அதிகரித்தமை என்பன மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013, 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை அறிக்கையிடப்பட்டிருந்த போதும், 2015, 2016 ஆம் ஆண்டுகளில் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியத்தை சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 290,282,935 தொகையான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 514,967,837 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டுகளுக்காகவும் அமுல்படுத்தப்படும் கால அட்டவணை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் காணப்பட்டமை**

பரீட்சைகள் நடாத்தி 03 மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையின் போது, பீடமொன்றின் பெறுபேறுகள் வெளியிடுவதற்காக பரீட்சை நடாத்தி 122 நாட்கள் முதல் 261 நாட்கள் வரையிலான காலம் கடந்திருந்தது. பல்கலைக்கழகத்தின் செயன்முறைப் பரீட்சைக்கான பெறுபேறுகளை வழங்குவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமை மற்றும் பல்கலைக்கழகத்தில் நிரந்தர கல்விசார் பதவியணியினரை விட வெளிவாரி கல்விசார் பதவியணியினர் அதிகரித்த எண்ணிக்கையில் இருக்கின்றமை என்பவற்றால் அவர்களுக்கு மதீப்பீட்டிற்காக அனுப்பப்படுகின்ற விடைப் பத்திரங்கள் தாமதமாக மீளக் கையளிக்கப்படுவதன் காரணமாக எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சைகளினதும் ஒட்டுமொத்த பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

2017 ஆம் ஆண்டின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் பிரகாரம் ஒரு மாணவரின் கிரயம் ரூபா 425,602 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 300,660 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் 41 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அதற்கான மீண்டெழும் செலவினம் ரூபா 66 மில்லியனால் அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

**(இ) பட்டப்பின் பாடநெறிகளை நடாத்துதல்**

பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் பீடத்தில் 06 பட்டப்பின்பாடநெறிகளுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 424 ஆக இருந்ததுடன் அதில் பட்டப்பின் பட்டத்தைப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 78 மாத்திரமாக இருந்தது. 192 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்ததுடன் 154 பேர்களிடமிருந்து நிபந்தனைகளைப் பரீட்சிக்கும் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 01 வருடம் முதல் 09 வருடங்கள் விரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற உடன்படிக்கை மற்றும் பிணை முறிகளை மீறிய மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,694,442 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 1,022,650,000 பெறுமதியான 03 காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 8,024,948 தொகையான திறைசேரி ஆராய்ச்சி மானியங்களிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 2,310,734 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் ரூபா 5,714,214 மீதியொன்று காணப்பட்டது. ஆராய்ச்சிகளை அமுல்படுத்துதல், சர்வதேச ஆராய்ச்சி விவாதங்கள், ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளை சர்வதேச மற்றும் உள்நாட்டு மாநாடுகளுக்காக சமர்ப்பித்தல் போன்றவைகளுக்காக கல்விசார் பதவியணியினரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் குறைவடைந்தமையால் அதற்காக வருடாந்தம் திறைசேரியினால்

வழங்கப்பட்ட மூலதன மானியத்தின் பயன்பாடு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 30 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 29 சதவீதம் என்ற கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

02 வங்கிக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 6,243,954 மற்றும் ரூபா 26,638,718 தொகையான மீதிகள் காணப்பட்டதுடன், இந்த இரண்டு கணக்குகளிலும் வருடம் முழுவதும் முறையே ரூபா 6,363,084 மற்றும் ரூபா 26,318,724 தொகையான மாதாந்த சராசரி மீதியொன்று காணப்பட்டமையால் நடைமுறைக் கணக்குகளில் பாரியளவிலான பண மீதி காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2017 பெப்ரவரி 01 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்காக புதிய பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கல்விசார் பதவியணியினரின் 60 வெற்றிடங்களில் 2018 யூலை 30 இல் உள்ளவாறு நிரப்பப்படாத வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்குரியதாக பல்கலைக்கழகத்தால் தனது விடயப் பரப்பின் கீழ் உள்ள பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய கூறுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்காக முறையான உடன்படிக்கையொன்று எழுதப்பட்டு கையொப்பமிட வேண்டிய போதிலும், ரூபா 12,045,685 பெறுமதியான 03 கொள்வனவுகளுக்காக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த வகுப்பறை மற்றும் விரிவுரை மண்டப வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 32 தொலைக்காட்சி இயந்திரங்கள் (LED Smart TV) மற்றும் 32 Blue Ray Player என்பவற்றைக் கொள்வனவு செய்து பொருத்துவதற்காக ரூபா 6,063,327 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த பொருட்கள் கிடைத்து 03 மாதங்களின் பின்னரே பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு பொருட் பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன.

இந்த பெறுகைகளுக்கான கூறு விலைகளின் பிரகாரம் பொருட்களை வழங்குதல், பகிரந்தளித்தல் மற்றும் பொருத்துதல் வழங்குனரால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன் 2018 யூலை 30 ஆந் திகதியளவிலும் அந்த பொருந்துதல் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், செயலாற்றல் காப்பீட்டின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொருத்துதல்களுக்காக தேவையான இறாக்கைகள் இன்மையினால் கொள்வனவு செய்யப்பட்ட 32 Blue Ray Players விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 யூன் 01 ஆந் திகதி நடன மற்றும் நாடகக் கலைப் பீடத்தின் கணனி ஆய்வு கூடத்திற்காக கட்டளையிடப்பட்ட ரூபா 689,900 தொகையான 05 கணனிகள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. எனினும், அதனுடன் கட்டளையிடப்பட்ட 05 யூபிஎஸ் பற்றரிகள் 2017 யூன் 30 ஆந் திகதி கிடைத்திருந்த போதும் கணனி இல்லாமையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 27 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே காண்பிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள், தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்படாமை. |
| (ஆ) காசு மற்றும் வங்கி | வங்கி நடைமுறைக் கணக்குகளில் பாரியளவான காசு மீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை. |
| (இ) ஆராய்ச்சிகளை அமுல்படுத்துதல் | ஆராய்ச்சியினைச் செய்வதற்காக கிடைக்கின்ற பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை மற்றும் ஆராய்ச்சிகளை அமுல்படுத்துவதில் மந்த நிலைமை. |
| (ஈ) பதவியணியனர் நிர்வாகம் | கல்விசார் உதவி பதவியணியிர்களில் உத்தியோகத்தர்களின் விடுமுறை சரியான பிரகாரம் ஆவணப்படுத்தப்படாமை , வருகை மற்றும் வெளியேறுகை உரிய பிரகாரம் பதியப்படாமை, உத்தியோகத்தர்கள் நாட்டிலிருந்து வெளியே எடுத்த விடுமுறைகள் சமயோசித விடுமுறைகளிலிருந்து குறைக்கப்படாமல் அமைய விடுமுறைகளில் கழிக்கப்பட்டமை, பூரணமான சம்பள அதிகரிப்புக் காலத்தில் சேவையாற்றாதிருக்கும் போது சம்பள அதிகரிப்பு செலுத்தப்பட்டமை. |